**7.11.2023**
**OS 26/2019**
**பி.வா.சா.2 பூமிராஜ்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனக்கு சுமார் 59 வயதாகிறது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1966 முதல் 1974ஆண்டுகள் காலகட்டத்திற்குள் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கிரையம் பெறப்பட்ட காலகட்டத்தில் எனக்கு வயது சுமார் 8 அல்லது 10 இருக்கும் என்றால் சரிதான். 1980, 1984, 1986 ஆகிய காலகட்டங்களில் எங்கள் 3பேரின் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1980, 1984, 1986 ஆகிய காலகட்டங்களில் கிரையம் வாங்கப்பட்ட சமயத்தில் எனக்கு வயது சுமார் 16 இருக்கும் என்றால் சரிதான். 1980, 1984, 1986 ஆகிய காலகட்டங்களில் எங்கள் 3பேரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்களை நாங்கள் 3பேரும் பாகவிஸ்தி செய்து கொண்டோம் என்றால் சரிதான். அதை 2002-ல் பாகவிஸ்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அவ்வாறு 2002ல் பாகவிஸ்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பாகவிஸ்தி பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த பாகவிஸ்தி பத்திரத்தின் 2வது பக்கத்தில் நான் ஒரு இந்து அபிபக்த குடும்பம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்களில் செட்டில்மெண்ட் சொத்தும், உயில் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் சொத்து எது, உயில் சொத்து எது என்று எனக்குத் தெரியும். வழக்கு சொத்துக்கள் 11-இலக்க சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் 11-இலக்க சொத்துக்களில் உயில் சொத்துக்களானது சர்வே எண்.389/3, 389/4, 327/1, காடு, 34 செண்ட் நஞ்சை உள்ளது. மொத்தம் 7 இலக்க சொத்துக்கள் உயிலில் கட்டுப்பட்டது. மற்ற சொத்துக்களின் சர்வே எண் ஞாபகமில்லை. எனது பெயரில் தாக்கல் செய்யப்பட்ட பட்டாக்கள்(பி.வா.சா.ஆ.18 முதல் 20) வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17வதாக தாக்கல் செய்துள்ள ஆவணம்தான் இந்த உயில். இந்த ஆவணம் இதுநாள் வரை யார் வசத்தில் இருந்தது என்றால் என்வசம்தான் இருந்தது. இந்த ஆவணத்தை நான் இந்த வழக்கின் ஆரம்பத்தில் தாக்கல் செய்யவில்லை, தற்போதுதான் தாக்கல் செய்துள்ளேன். இந்த உயிலை எனது அப்பாதான் எழுதி வைத்துள்ளார். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் இந்த உயிலை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கான

காரணத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, சாட்சி உயில் வைத்த இடம் தெரியவில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொல்கிறார். எனது தகப்பனார் இந்த உயிலை என்னிடம் நேரடியாக கொடுத்துவிட்டார் என்றால் இல்லை, அவர் வைத்திருந்தார். நான்தான் தேடி எடுத்தேன். எனது தகப்பனார் முத்துகருப்பன் நாடார் என்றுதான் கையெழுத்து போடுவார். பி.வா.சா.ஆ.17 ஆவணம் 2வது-பக்கத்தில் முத்துகருப்பன் என்றுதான் எழுதியுள்ளார், நாடார் என்ற எழுத்தை கிறுக்கி எழுதியுள்ளார் என்று சாட்சி சொல்கிறார். பி.வா.சா.ஆ.17ல் உள்ள கையெழுத்து என் தகப்பனாரின் கையெழுத்து அல்ல என்றும், வழக்கிற்காக என் தகப்பனாரின் கையெழுத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் இறந்துபோன வாதி பெரியதம்பிக்கோ, அனந்தம்மாள், மீனாட்சி ஆகியோருக்கு ஏன் சொத்தை எழுதி வைக்கவில்லை என்ற விவரத்தை சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். ஆனால் எந்தெந்த சொத்துக்களை யார்யாருக்கு கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது கைப்பாவையாக இருந்ததால் தங்கள் இருவருக்கு மட்டுமே சொத்தை எழுதி வைத்து, மற்ற ஆண் வாரிசுக்கும், பெண் வாரிசுகளுக்கும் சொத்தை எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எழுதி வைத்திருந்தால் அந்த விவரங்களை குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.17ல் சொல்லியிருப்பார் என்றும், அவ்வாறு சொல்லாததால் அதில் சொல்லியுள்ளதுபோல எவ்வித சொத்துக்களையும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த உயிலின் 2வது பக்கத்தில் உயில் சாசனத்தை மாற்ற, திருத்த, ரத்து செய்ய என் தகப்பனாருக்கு உரிமை உள்ளதாக கண்டுள்ளது. இந்த உயில் எழுதும் சமயத்தில் என் தகப்பனாரை எனது அண்ணன்தான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார் என்றால் தெரியாது. எனது அண்ணனின் மருமகள்தான் 4ம் பிரதிவாதி மீனாள். 4ம் பிரதிவாதியும், நானும், மற்ற சகோதரர் ஆசைத்தம்பியும் சேர்ந்து ஒரு பாகவிஸ்தி பத்திரத்தை போட்டுள்ளோம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.13. பி.வா.சா.ஆ.13ல் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். சர்வே எண்.389/3, 389/4 சொத்துக்களை தான் பாகம் செய்துள்ளதாக பி.வா.சா.ஆ.13ல் கண்டுள்ளது. அந்த சர்வே எண்கள் வழக்கில் 4மற்றும் 5வது இலக்க சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது. இந்த பாகவிஸ்தி பத்திரத்தில் எனது குடும்பத்தை சார்ந்த மற்றவர்கள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பாகவிஸ்தி பத்திரத்தில் 2பக்கத்தில் 2வது பாராவில் நாம் ஒரு இந்து அபிபக்த குடும்பம் என்று கண்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள

நிருபணவாக்குமூலம் 5வது பக்கத்தில் கீழிருந்து 11வது வரியில் மேலும் என் தகப்பனார் எங்கள் பெயரில் சொத்துக்களை வாங்கி எங்களுக்கு கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். 1980, 1984, 1986 ஆகிய வருடங்களில் எங்கள் பெயரிலும் 1ம் வாதி பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கூட்டு சொத்துக்களாக அனுபவித்து வந்த சொத்துக்கள் என்பதால் எனக்கோ அல்லது எனது தகப்பனாருக்கோ அதில் தனிப்பட்ட பாத்தியதை இல்லை என்றால் சரியல்ல. கிரையம் பத்திரம் என் தகப்பனார் பெயரில் இருந்தாலும், அந்த சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்களாக அனுபவிக்கப்பட்டு வந்தன என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களை வாங்குவதற்கு முன்பாக எங்களுக்கு தனிப்பட்ட வருமானம் வந்தது என்ற விவரத்தை என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. நான் உயில் மூலம் பாத்தியம் கொண்டாடும் சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்றும், அதில் எனக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா வெள்ளையநாடாருக்கு 1ஏக்கர் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தன என்றால் இல்லை. 6வது இலக்க சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. என் தகப்பானரால் என் தாயார் பெயருக்கு வாங்கப்பட்ட சொத்துக்கள். எந்த வருடம் வாங்கப்பட்டது என்று நினைவில்லை. அந்த சொத்தை கிரையம் வாங்கும்போது நான் கைகுழந்தை என்றும், எனக்கு அதை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் உயில் மூலம் பாத்தியம் கொண்டாடும் உயிலே மோசடியானது என்றால் சரியல்ல. அந்த உயிலில் சொல்லியுள்ள சொத்துக்களே பிரிபடாத பாகத்தில் 2/3 பாகம் என்றுதான் கண்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்<br>
சார்பு நீதிபதி,<br>
மேலூர்.